A

# முதலாம் திருப்புதல் தேர்வு - 2024

## பன்னிரெண்டாம் வகுப்பு

பதிவு எண் :

## தமிழ்

நேரம் : 3.00 மணி

பகுதி - I

மதிப்பெண்கள் : 90

அ) அனைத்து வினாக்களுக்கும் விடையளி. சரியான விடை தேர்க. 14 x 1 = 14

1. 'மீண்டுமந்த பழமைநலம் புதுக்குதற்கு' - கவிஞர் குறிப்பிடும் பழமைநலம்

க) பாண்டியரின் சங்கத்தில் கொலுவிருந்தது உ) பொதிகையில் தோன்றியது

ங) வள்ளல்களைத் தந்தது

அ) க மட்டும் சரி ஆ) க, உ இரண்டும் சரி இ) ங மட்டும் சரி ஈ) க, ங இரண்டும் சரி

2. தமிழில் திணைப்பாகுபாடு ______ அடிப்படையில் பகுக்கப்பட்டுள்ளது.

அ) பொருட்குறிப்பு ஆ) சொற்குறிப்பு இ) தொடர்க்குறிப்பு ஈ) எழுத்துக்குறிப்பு

3. அய்யப்ப மாதவன் உருவாக்கிய கவிதைக் குறும்படம் ______

அ) நீர்வெளி ஆ) இன்று இ) மஸ்னவி ஈ) மழைக்குப் பிறகும் மழை

4. திறனாய்வுக் கலையைத் தமிழுக்கு அறிமுகப்படுத்தியவர்களுள் குறிப்பிடத்தக்கவர் ______.

அ) நா. வானமாமலை ஆ) பரலி.சு.நெல்லையப்பர்

இ) தி.சு.நடராசன் ஈ) பாரதியார்

5. பொதிகை என்பது எந்த மலையைக் குறிக்கும்?

அ) குற்றாலமலை ஆ) விந்தியமலை இ) இமயமலை ஈ) சாமி மலை

6. பொருத்தி விடை தேர்க:

அ) அவன் அவள் அவர் - 1. உளப்படுத்தாத் தன்மைப் பன்மை

ஆ) நாங்கள் முயற்சி செய்வோம் - 2. உளப்பாட்டுத் தன்மைப் பன்மை

இ) நாம் முயற்சி செய்வோம் - 3. தன்மைப் பன்மைப் பெயர்கள்

ஈ) நாங்கள், நாம் - 4. பதிலிடு பெயர்கள்

அ) 4, 1, 2, 3 ஆ) 2, 3, 4, 1 இ) 3, 4, 1, 2 ஈ) 4, 3, 1, 2

7. சங்க இலக்கியத்தில் இல்லாத சொற்கள், சங்ககாலச் சமூகத்தில் நடைமுறையில் இருந்துள்ளன. அவை

அ) அறவோர், துறவோர் ஆ) திருமணமும், குடும்பமும்

இ) மன்றங்களும், அவைகளும் ஈ) நிதியமும், சுங்கமும்

8. காளைகளில் பல இனங்களைக் காட்டும் நூல்

அ) பாலைக்கலி ஆ) முல்லைக்கலி இ) குறிஞ்சிக்கலி ஈ) நெய்தற்கலி

9. மனித சமூகத்தின் அடிப்படை அலகு ______.

அ) திருமணம் ஆ) குடும்பம் இ) தாய்மனை ஈ) மணந்தகம்

10. கீழ்க்காண்பனவற்றுள் பக்தவத்சல பாரதி இயற்றாத நூல் ______.

அ) பாணர் இனவரைவியல் ஆ) தமிழர் உணவு

இ) தமிழர் மானிடவியல் ஈ) நுண்கலைகள்

11. திண்ணைப் பள்ளிக்கூடங்கள் எந்த நூற்றாண்டில் அதிகம் இருந்தன?

அ) 12 ஆம் ஆ) 17 ஆம் இ) 18 ஆம் ஈ) 19 ஆம்

SS PRITHVI

www.Padasalai.Net

www.Padasalai.Net www.TrbTnpsc.com



12. "பலர் துஞ்சவும் தான் துஞ்சான்" விழித்திருந்தவரும் அவரைப் பாடியவரும்

அ) சோழன் நலங்கிள்ளியை, பரணர் ஆ) சோழன் நலங்கிள்ளியை, கோவூர்கிழார்

இ) கணைக்காலிரும்பொறையை, கபிலர் ஈ) கரிகாலனை, உருத்திரங் கண்ணனார்

13. அதிசய மலரின் புன்னகையைப் பிடித்தவாறு தமிழ்நதி கடக்கச் சொல்வது

அ) கடந்தகால துயரங்களை ஆ) ஆட்களற்ற பொழுதை

இ) பச்சையம் இழந்த நிலத்தை ஈ) இவை அனைத்தையும்

14. பொருந்தாத ஒன்றைக் கண்டறிக:

அ) தனித்தமிழ்த் தந்தை - மு. வரதராசனார்

ஆ) ஆராய்ச்சிப் பேரறிஞர் - மயிலை. சீனி வேங்கடசாமி

இ) தமிழ்த்தென்றல் - திரு.வி.க

ஈ) மொழிஞாயிறு - தேவநேயப் பாவாணர்

பகுதி - II

பிரிவு - 1

எவையேனும் மூன்றனுக்கு விடை தருக: 3 x 2 = 6

15. கூதிர்ப்பாசறை என்பது யாது?

16. செல்வம் இருப்பதற்கான வழியாக வள்ளுவம் உரைப்பன யாவை?

17. எண்வகை மெய்ப்பாடுகள் யாவை?

18. முகம் முகவரியற்றுப் போனதற்குச் சுகந்தி சுப்பிரமணியன் கூறும் காரணத்தை எழுதுக.

SS PRITHVI

பிரிவு - 2

எவையேனும் இரண்டனுக்கு விடை தருக: 2 x 2 = 4

19. 'தமிழர் வளர்த்த அழகுக் கலைகள்' நூல் பற்றிக் குறிப்பு வரைக.

20. நடை அழகியல் பற்றித் தொல்காப்பியம் கூறும் கருத்தைக் குறிப்பிடுக.

21. அக்காலத்துக் கல்வி முறையில் மனைப் பயிற்சிக்கு உதவிய நூல்கள் யாவை?

பிரிவு - 3

எவையேனும் ஏழனுக்கு விடை தருக: 7 x 2 = 14

22. ***தமிழ்ச்சொல் தருக.***

அ) Lobby ஆ) Tips

23. ஆசிரியருக்கு கீழ்படிதல் என்னும் குணம், உண்மையானவற்றை தெரிந்துக் கொண்டு அறியாமையினை அகற்றி பல நல்லனவற்றை கற்று கொடுக்கும்.

*(வல்லின மெய்களை இட்டும் நீக்கியும்)*

24. குறியீட்டு உத்தியின் அடிப்படை இலக்கணங்களை எழுதுக.

25. சாலைகளில் இடம்பெற்றிருக்கும் குறியீடுகள் போக்குவரத்தினைச் சீர்செய்யும் பாதுகாப்பாகப் பயணிக்கவும் உதவுகின்றன. (விடைக்கேற்ற வினா அமைக்க)

26. ***தொடர்களில் இடம்பெற்றுள்ள மரபுப் பிழைகளை நீக்கி எழுதுக.***

அ) முருகன் சோறு சாப்பிட்டு பால் குடித்தான்

ஆ) பனை மட்டையால் கூரை வைத்திருந்தனர்.

27. ***பொருள் வேறுபாடு அறிந்து தொடர் அமைக்க :***

களம் - கலம்

www.Padasalai.Net

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

28. சிலப்பதிகாரத்தின் பாவிகத்தைக் குறிப்பிடுக.
29. ஒரு விகற்பம், பல விகற்பம் என்றால் என்ன?
30. ஏதேனும் ஒன்றனுக்குப் புணர்ச்சி விதி தருக.
அ) செல்லிடத்து ஆ) புதுப்பெயல்

பகுதி - III

ஆறு வரிகளுக்கு மிகாமல் விடையளி.

பிரிவு - 1

எவையேனும் இரண்டனுக்கு மட்டும் விடையளி. 2 x 4 = 8

31. 'ஏங்கொலி ஞாலத்து இருளகற்றும்' - இடம் சுட்டிப் பொருள் விளக்கம் தருக.
32. நாட்டிய அரங்கின் அமைப்பை இளங்கோவடிகள் காட்சிப்படுத்தும் பாங்கு குறித்து நும் கருத்தை எழுதுக.
33. சினத்தால் வரும் கேட்டினை எழுதுக.
34. கொடை வழங்குதலில் நீங்கள் பின்பற்ற விரும்புவனவற்றை எழுதுக.

பிரிவு - 2

எவையேனும் இரண்டனுக்கு மட்டும் விடையளி: 2 x 4 = 8

35. சங்கப் பாடல்களில் ஒலிக்கோலம் குறிப்பிடத்தக்க ஒரு பண்பாகும் - விளக்குக.
36. தாயும் தந்தையும் பணிக்குச் செல்லும் இன்றைய சூழலில் குடும்ப உறுப்பினர் என்ற முறையில் நீங்கள் குடும்பத்திற்குச் செய்யும் உதவிகள் யாவை?
37. மணலில் எழுதியது முதல் தற்காலம் வரை எழுதும் முறையில் ஏற்பட்டுள்ள மாற்றங்களைத் தொகுத்துரைக்க.
38. இந்தோ-சாரசனிக் கட்டடக்கலை பற்றி எழுதுக.

பிரிவு - 3

எவையேனும் மூன்றனுக்கு மட்டும் விடையளி. 3 x 4 = 12

39. 'எறும்பு ஊரக் கல்லும் தேயும்' என்னும் பழமொழியினை வாழ்க்கை நிகழ்வில் அமைத்து எழுதுக.
40. பிறிதுமொழிதல் அணியைச் சான்றுடன் விளக்குக.

(அல்லது)

சினமென்னும் சேர்ந்தாரைக் கொல்லி இனமென்னும்
ஏமப் புணையைச் சுடும் - இக்குறளில் பயின்றுவரும் அணி சுட்டி விளக்குக.

41. தமிழாக்கம் தருக:

In terms of human development objectives, education is an end in itself, not just means to an end. Education is a basic human right. It is also the key which opens many economic, social and political doors for people. It increases access to income and employment opportunities. While economists generally analyze the importance of education largely as a means for better Opportunities in life - end that is the main theme of this chapter - let it be Clearly stated that educating people is a worthy goal in itself, irrespective of the economic rates of return.

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



42. பா நயம் பாராட்டுக. (மையக்கருத்தை எழுதி ஏதேனும் மூன்று நயங்களை எழுதுக):

பூமிச் சருகாம் பாலையை
முத்துப் பூத்த கடல்களாக்குவேன்!
புயலைக் கூறு படுத்தியே - கோடிப்
புதிய தென்றலாக்குவேன் !
இரவின் விண்மீன் காசினை - செலுத்தி
இரவலோடு பேசுவேன்!
இரவெரிக்கும் பரிதியை - ஏழை
விறகெரிக்க வீசுவேன்!

- நா. காமராசன்

43. பின்வரும் தலைப்புகளில் ஏதேனும் ஒன்றில் எட்டு வரிகளில் கவிதை புனைக:

நட்பு *(அல்லது)* இயற்கை

## பகுதி - IV

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்: 3 x 6 = 18

44. அ) எச்.ஏ.கிருட்டிணனார் 'கிறித்துவ கம்பரே' என்பதை நும் பாடப்பகுதி வழி நிறுவுக.

*(அல்லது)*

ஆ) பண்பின் படிமமாகப் படைக்கப்பட்ட இராமன், பிற உயிர்களுடன், கொண்டிருந்த உறவு நிலையைப் பாடப்பகுதி வழி நிறுவுக.

45. அ) நிருவாக மேலாண்மை குறித்து வெ.இறையன்பு கூறும் கருத்துகளை தொகுத்து எழுதுக.

(அல்லது)

ஆ) பண்டைக்காலக் கல்வி முறையில் ஆசிரியர் மாணவர்களுக்கிடையே நிகழ்ந்த கற்றல், கற்பித்தல் முறைகளைத் தொகுத்தெழுதுக.

46. அ) சங்ககால வரலாற்றை அறிந்துகொள்ள, புகளூர்க் கல்வெட்டு எவ்வகையில் துணைபுரிகிறது? விளக்குக.

*(அல்லது)*

அ) பாரதியின் கடிதம் வாயிலாக நீங்கள் அறிந்துகொண்ட மொழிப்பற்று, சமூகப்பற்று ஆகியவற்றை விவரிக்க

## பகுதி - V

அடிபிறழாமல் செய்யுள் வடிவில் எழுதுக. 4 + 2 = 6

47. அ) 'ஒருமையுடன்' - எனத் தொடங்கும் பாடலை எழுதுக.

ஆ) 'நோய்' - என முடியும் குறளை எழுதுக.

******

SS PRITHVI
www.Padasalai.Net

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com